
# அருள் ஒளி



புரட்டாதி இதழ்

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை
2007

மலர் 58



## துர்க்காதேவியின் தேர்த்திருவிழா

# பொன் விழாக் காணும் கம்பவாரிதி



### கம்பவாரிதி

### திருமிகு இ.ஜெயராஜ்

**24-10-2007**

- ☆ சண்டிலிப்பாய் கிராமத்தில் பிறந்து சர்வதேசம் அறியத் தன் வாழ்வை வழங்கிய பெருந்தொண்டன்.
- ☆ யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அன்னையின் திருவடியில் வளர்ந்து, கல்லூரி மாணவனாய் நின்று தமிழ் முழங்கிய மைந்தன்.
- ☆ கம்பனுக்கு கழகம் அமைத்து, நல்லூரில் கம்பன் கோட்டம் மாடமாளிகை அமைத்து தமிழுக்கு விழா எடுத்து தரணி போற்ற வைத்த தனயன்.
- ☆ ஆன்மீக விரிவுரையால் ஆலய வீதிகளை அடியார் வெள்ளத்தால் நிறைத்து அரிய வரலாறுகள் அறிய வைத்த அறிஞன்
- ☆ கல்வியாளனை, கலை வளர்த்தவனை கலங்கரை விளக்காய் நின்றவனை சிங்காசனம் இருத்தி நன்றியில் நிலைபெற்ற நாயகன்
- ☆ வளரும் பயிர்களை வளர்த்து உரமிட்டு உற்சாகமூட்டி உலகெலாம் தமிழ் உரைக்க உய்யும்வழி காட்டிய உத்தமன்
- ☆ அகதியாகச் சென்று அறிவினால் கொழும்பை வென்று அங்கும் தமிழ்த்தாயை அரியணையிருத்தும் செயல் வீரன்

*உங்கள் வாழ்வு, பணி சிறக்க அகவை ஐம்பது நிறைவுறும் நாள் அறிந்து*
*அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம் வாழி பல்லாண்டு பல்லாண்டு.*




# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2007 சர்வசித் வருடம் ஐப்பசி

மலர் 58

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல, QD/74/NEWS/2006Y}


OCT 2007

## பயன்தரு மரங்களை நாட்டி வளம் பெறுவோம்

இயற்கையே இறைவன். இயற்கை அன்னை தந்த இனிய செல்வங்களில் தலவிருட்சங்களான மரங்களை மகத்தான தெய்வங்களாக நன்றியோடு வழிபட்டார்கள் நம் முன்னோர்கள். மரங்கள் மனித வாழ்வுக்கு அவசியம் என்பதை உணர்ந்து காலமெல்லாம் மரங்களைக் காத்து அவற்றின் பலனை உணர்ந்து வாழ்ந்தார்கள், வாழ்த்தினார்கள். இன்று இந்நிலை அருகிவருவது கவலைக்குரிய விடயமாகும். யாழ்குடாநாட்டில் என்றுமில்லாதவாறு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது. போர்ச்சூழலில் பெருந்தெருக்களில் நின்ற பலநூறு வருடம் பழமைவாய்ந்த மரங்கள் அடியோடு வீழ்த்தப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. விறகுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீடுகள் தோறும் தினமும் மரங்கள் தறிக்கப்படுகிறது. A9 என்ற பெருந்தெரு மூடப்பட்டதனால் வன்னிப் பிராந்தியத்திலிருந்து வரும் விறகு, காட்டு மரங்கள் வராமையால் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மரங்கள் அழிக்கப்படுவது வேகமாக நடைபெறுகிறது. மரங்களை அழிப்பதனால் சூழல் மாசடையும் என அறிஞர்கள் எடுத்துரைத்த வண்ணமாகவுள்ளனர். தறித்த மரங்களுக்குப்பதிலாக மரங்களை நடும் மனோபாவம் எம்மக்களிடையே வளரவேண்டும். மரங்கள் இல்லையேல் மழை இல்லை. நிழல் இல்லை. மாசற்ற காற்றில்லை. இயற்கை மருத்துவம் இல்லை. பாலைவனமாகி பசுமையற்ற சூழலாக எம்தேசம் மாறிவிடும். காலம்காலமாக விருட்சமாக விளங்கும் மரங்களின் எண்ணிறைந்த பயன்களை எம் முன்னோர் விளங்கி பயபக்தியோடு மரங்களை பாதுகாத்தனர். மரங்களை மையமாகக் கொண்டே ஆலயங்கள் எழுந்தன. அன்றைய பள்ளித்தலங்கள் மரநிழல்களே. மரமின்றி மனிதன் இல்லை என்ற அளவுக்கு தண்ணீர் ஊற்றி மரங்களை வளர்த்தனர். பிள்ளைகள் பிறந்தவேளை எல்லாம் கோவிலில் நேர்த்திசெய்து. தெய்வத்திடம் பிள்ளையை ஒப்படைத்து விற்றுவாங்கல் என்ற நேர்த்திக் கிரியையில் பிள்ளையின் கையைப்பிடித்து கோவில் சூழலில் மரங்கள் காணிக்கையாக நடப்படும். பொதுவாக தென்னை, கமுகு நடுவது வழக்கம். இவ்விரு மரங்களையும் தென்னம் பிள்ளை என்றும், கமுகம் பிள்ளை என்றும் அழைக்கும் மரபே இன்றும் உண்டு. பிள்ளையின்

நேர்த்தியோடு தொடர்பு பட்டதால் உருவான வாய்மொழி என்பர். ஒவ்வொரு குழந்தையின் பிறப்போடும் மரங்களை நட்டுக் காக்கும் மாண்பு எம் சமுகத்தில் நிலவியது. இவை இன்று அருகி வருகின்றது. வீட்டு வளவில் பயன்தரு மரங்களைப் பேணும் பண்பாடு எம்முன்னோர் காத்த பயனுள்ள பணியாகும். தனக்கு பயன் எனக்கருதுவதைவிட தன் எதிர்காலச் சந்ததிபற்றிய (தூரநோக்கு) தூய பணியாக இப்பாரம்பரியம் நிலவியது. இன்று இத்தகைய இயல்புகள் மானிட உள்ளங்களில் அரிதாகிவிட்டது. ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்ட காலத்தில் சூழலைப்பாதுகாக்கும் மரங்களை மிகவும் நேசித்துள்ளமை அறியமுடிகின்றது. பெரிய மரங்களை விலத்தியே வீதிகளை அமைத்துள்ளமையும், தெரு ஓரங்களில் மரங்களை நட்டு உண்டாக்கியமையும் இன்று சிறப்பாகப் பேசப்படுகிறது. எம்மண்ணில் மரங்களைப் பாதுகாப்பது தொடர்பாகக் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிவநெறிக்காவலர் அமரர் க. கனகராசா (மில்க்வைற் தொழில் அதிபர்) பல்வேறு முயற்சிகளை எடுத்து உழைத்தமை மறக்க இயலாது. கற்பகதருவாகிய பனையை காப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டவர். அவரால் வழங்கப்பட்ட பனை நாற்றுக்கள் வன்னிப் பிரதேசத்தில் இன்று பனை மரங்களாக காட்சியளிக்கிறது. யாழ் குடாநாட்டில் போரின் தாக்கத்தாலும் குறிப்பாக நிலவெடிகள், எறிகணைகள் போன்ற இரசாயன சேதனங்களாலும் நிலம் மாசடைந்து, நீர் மாசடைந்து வருவதால் புதியவகை நோய்கள் உருவாகிவருகிறது. கடந்தவாரம் புகழ்பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபராக விளங்கிய அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் பதின்மூன்றாவது ஆண்டு நினைவுப்பேருரையை ஆற்றிய யாழ் பல்கலைக்கழக விவசாயத்துறை பேராசான் கலாநிதி. கு. மிகுந்தன் தமது உரையில் யாழ் குடாநாட்டில் சூழல் மாசடைதலின் வேகம் பற்றியும் அதனால் விளையும் ஆபத்துக்கள் பற்றியும் நன்கு விளக்கியுள்ளார். தீராத புதிய நோய்கள் மனிதர்களுக்கு முன் மரங்களுக்கு உருவாகி வருவதை வெளிப்படுத்தினார். குறிப்பாக முள்முருக்கம் மரம் கடந்த ஆண்டு குடாநாட்டில் முற்றாகப் புதியநோயினால் அழிந்து போய்விட்ட பரிதாபத்தை எடுத்துரைத்தார். இதன் தாக்கம் மனிதர்களையும் எவ்வாறு தாக்கியுள்ளது என அவர் மேலும் விபரித்தார். நாம் செய்த வினைப்பயன் இயற்கையும் எம்மை வருத்துகின்றது. எனினும் எம் கடன் இயற்கையை நேசிப்பது. சூழலைப் பாதுகாக்க அனைவரும் தங்களாலான பணிசெய்தல் காலத்தின் தேவையாகும். போர் ஓய்ந்தபின் பார்ப்போம் என இப்பணியை கைவிடாது அனைவரும் மாரிகாலம் ஆரம்பித்திருக்கும் இவ்வேளை மரம் நடுகையை ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் பொதுமக்கள் அக்கறையோடு செயற்பட்டு முன்வருதல் அவசியமாகும்.

**ஓரர சோரால் வேம்பொன்**
**றெருபத்துப் புளியும் மூன்று**
**சீர்பெறு விளவும் வில்வம்**
**மூன்றுடன் மூன்று நெல்லி**
**பேர்பெறு ஐந்து தெங்கு**
**பெருகுமா ஐந்து பேணி**
**ஆர் பயிராகச் செய்தார்**
**அவர்க்கிலை நரகந் தானே**

**- நீதிசாரம்**

**- ஆசிரியர்**

# சிவபெருமானும் செம்மனச் செல்வியும்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

57 ஆவது இதழ் தொடர்ச்சி

முகப்புரை:-

பாண்டிநாடு பழம்பதி. பத்திசெய் அடியரைப் பரம் பரத்துய்க்கும் செழும்பதி. உலகம் உயிர் தோற்றத்திற்கும் நிலை பேற்றிற்கும் ஒழுக்கத்திற்கும் மூலப்பொருளான ஆதிசிவன் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை நிகழ்த்துவதற்கு நிலைக்களனாக நின்றபதி ஆங்கு,

மொய்வைத்த வண்டின்செறிசூழன் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலையந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தருஞால மளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந் தருஞ்செவ்வி மணஞ்செ யிரம்.

இன்னும்,

மும்மைப் புவனங்களின் மிக்கதன் றே அம்மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார்திரு வால வாயிர்
எம்மைப் பவந்தீரப் பவர்சங்க மிருந்த தென்றால்

என்று பெரிய புராணம் ஏத்தும் மேன்மை பெற்றது அம் மூதூர்.

மலைநீரைத் தன்னகத்துத் தாங்கி ஓடுவது எல்லாம் ஆறானாலும் வையைக்கும் வையைக் கரைக்கும் தனித்துவமான மகத்துவமும் தெய்வச் சிறப்பும் பெரிதும் உண்டு.

சிவபெருமான், அரிமர்த்தனபாண்டிய மன்னன், செம்மனச்செல்வியார், திருவாதவூரடிகளார் திருவடிகளைத் தரிக்கும் தவத்தால் உயர்ந்தது வையைப்பேராற்றங்கரை.

பின்னரும் சைவசமயமே மேலான சமயம் என்னும் உண்மையை உலகவர்க்கு உணர்த்தத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் வரைந்த பாசுர ஏட்டை ஏந்தி நீரைக்கிழித்து எதிர்த்து ஓடுவதற்கு நிலைக்களனாக திருவருள் ஆற்று நீரைச் சுமந்து நின்றது வைகை வெள்ளம்.

கடைச்சங்கத் தமிழ் நூலான பரிபாடலில் எட்டுப்பாடல்களாகப் புலவர் நாவில் பொலியும் பெருமைக்குரியது வைகை. வைகைப் புதுவெள்ள நீராடல் சங்க கால ஆடவர் மகளிர்க்குக் கோலாகலமான பெருவிழாக் கொண்டாட்டம் அன்றோ"

நீராடும் மாந்தருடைய அகப்புற அழுக்குகளைத் தான் ஏற்று தூய்மையும் புத்துணர்வு புதுப்பொலிவு மகிழ்ச்சி இன்பத்தை வழங்கும் வைகையின் மேன்மை சொல்லும் தரமன்று.

அடியவருக்கு ஏற்பட்ட அல்லலை அகற்றச் சிவபெருமான் விடுத்த வேணிக்கங்கை வைகை வெள்ளமாக விரைந்து பாயும் பெருமையைப் பெற்றதன்றோ!

தெய்வம் குடிகொள்ளும் வைகைக் கொடியே பொய்யில் மெய்ம்மைச் சைவம் வையம் உய்யப் பையப் பையப் பரிந்து படர்வதாக!

மதுரைச் சோமசுந்தரப்பெருமான் மண்சுமந்து வைகை ஆற்றங்கரையைத் திருவம்பலமாகக் கண்டு கரைந்துருகும் புலம்பல் கல்நெஞ்சையும் கரைக்கும் காட்சி அன்றோ?

"நூல்களால் புகழ்ந்து போற்றப்படும் வையை நதிக்கரை திரு அம்பலமாக திரை வீசும் புனல் ஓசை தேவதும்பியாகப் பரமபதியாகிய சோமசுந்தரக் கடவுளுடைய மண்சுமக்கும் திருவளையாட்டாகிய திருநடனத்தை நேரே தரிசித்தவர்கள் எல்லோரும் பதஞ்சலி வியாக்கிரதபாத முனிவர்களும் ஆனார்களோ?

"திருவரையிற் கட்டிய கந்தையாகிய கச்சையும், அழகிய திருப்புயத்தில் கொண்ட மண்வெட்டியும் சடைமுடியின் மீது கவிழ்க்கப்பட்டதொரு கூடையுமாகிப் பிட்டமு திட்டருளும் எசமாட்டியின் பின்பு வந்தருளிய கூலித் திருக்கோலத்தை இட்ட முறத் தொழும்படி நான் கண்டிலனே இறையோனே!

"கொன்றை மாலை அசையும் சடாமுடியை உடையவரே! பூர்வ சன்மங்களில் சிவபுண்ணியம் மிகச் செய்தவர்கள் நீர் ஊரும் புகழ் வையை நெடுங்கரையில் நின்றாரோ? பொன்முடி புனைந்த புகழ் மிகு பாண்டிய மன்னவனோ? மதுரை என்னும் பேரூரில் இருப்பவர்களோ? பிட்டமுது இட்டருளும் அம்மையாரோ?

"புண்ணியர் பொன்போலும் சடாமுடியில் மண்சுமந்து ஏறியருளப் பெறும் பெருமை மிகுந்த வந்தியினது நிலப்பங்கும் குளிர்பொருந்திய வேகவதி என்னும் பெயருடைய இந்நதியும் கண்ணுதல் கன்மம் என்னும் பகை நீங்க வெம்பரி ஏறும் தென்மதுரை மூதூரும் அல்லவோ சிவலோகம். திருவாதவூரடிகளார் இத்தன்மையாக வைகை நதிக்கரையைப் பூலோக சிவலோகமாகக் காணும் தவக்கண்ணுடையவரனார்.

திருவாலயில் கோயில் கொண்டருளும் அம்மை அப்பனார் வம்மென வந்து செம்மனச் செல்வி அம்மையாருடைய வல்வினையை விரைவாகத் தீர்த்தார் என்றால் அம்மையார் மெய்ம்மையால் நினைந்ததே அதற்குக் காரணம். அவருடைய பெயரும் செம்மையான மனம் படைத்தவர் என்னும் பொருளில் செம்மனச்செல்வி என்றானார்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர் தொகைத் திருப்பதிகம் நாலாம் திருப்பாடலில் அமைந்த 'திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட' என்னும் மணிவார்த்தையை அம்மையாருடைய பெயரோடு ஒப்பிட்டு நோக்க செம்மனத்தின் மெய்ம்மை புலனாகும்

செம்மனத்தால் மெயம்மையே நினைவார்கள் தம் வல்வினையை இம்மையே தீர்ப்பார் என்று திருநாவுக்கரசுநாயனார் தீர்க்கமாகப் பாடும் தேவாரம் அம்மையாருக்கு அருள்பாலித்தமைக்குச் சிறந்த சான்று எனக்கொள்ளலாம்.

"உலகத்தரே! வன்னியூர்த் தலத்து இறைவர் தம்மை மெய்ம்மையாக நினைவர்கள் தம்முடைய கொடிய வினையைத் தீர்க்கும் இயல்பினார். இப்பிறப்பு அப்பிறப்பு என்ற இரண்டின் உண்மையை உணராது உரைக்கும் சாராதீர்கள். வந்து வழிபடாற்றுங்கள்,

**இம்மை அம்மை யெனவிரண் டும்மிவை**
**மெய்ம்மை தானறி யாது விளம்புவர்**
**மெய்ம்மை யால்நினை வார்கள்தம் வல்வினை**
**வம்மின் தீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே**

**(5-259)**

அம்மையார் பிட்டினை அள்ளிக்கொடுக்க சிவபிரான் ஏற்று இன்புற்று அமுது செய்தார் என்பதற்குத் திருவாசகத்தில் காணப்படும் அகச்சான்று இவை,

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்டநேர்பட வந்தி லாத
சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

– திருக்கழுக்குன்றப் பதிகம்.

ஆலவாய் அப்பர் செம்மனச் செல்வியாரிடத்தில் பிட்டு வாங்கி அமுது செய்தமை என்பது அம்மையாருடைய எஞ்சிய சஞ்சித வினையைத் தமதாக்கிக் கொண்டமை தாற்பரியம்.

சிவபெருமான் வையை ஆற்றங்கரையில் நின்றமைக்கு அகச்சான்று திருநாவுக்கரசு நாயனார் ஆறாம் திருமுறையாகிய திருப்பூவணத் திருத்தாண்டகத்தில் காணலாம்.

"அருட்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
அணிகிளரும் உருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறலுந் தோன்றும்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே"

மதுரை நாயகர் செம்மனச் செல்வி அம்மையாருக்காக மண் சுமந்தமைக்குத் திருவாசகத்தில் அகச்சான்று இது,

மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்.

– கீர்த்தித் திருவகவல் 44-47

பெண்சுமந்த பாகத்துப் பெம்மான் மண்சுமந்தமைக்கும் பிரம்படி பட்டமைக்கும் திருவாசக அகச்சான்று இது,

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தின் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

– திருவம்மானை

இறைவன் செம்மனச் செல்வி அம்மையாருடைய எஞ்சிய வினைப்போகத்தைப் பிட்டு மூலம் தாமாகவே ஏற்றுக் கொண்டருளினார். ஏற்றிய வினையைப் பாண்டிய மன்னனிடத்தில் இறுக்கும் பொருட்டாகவே பிரம்படி பட்டார் என்பது ஏற்புடைத்து.

இனி, இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கிடையே சிவகணத்தவர் ஒளி வீசும் சிறந்த விமானத்தினை வானினின்றும் புவியில் இறங்கினார்கள். தாயே வருக என்று செம்மனச் செல்வி அம்மையாரை விமானத்தில் ஏற்றினார்கள். தேவர்களுடைய மலர் மழையும், பண்ணிறந்த இசையின் ஒலியும் வேத மந்திரங்களின் ஒலியும் பஞ்ச தும்பிகளின் முழக்கமும் வானில் விளங்கின. சிவபெருமான் திருவருளைப் பெற்றோர்கள் சென்றடைந்த சிவலோகத்தில் அமரச் செய்தார்கள், இந்நிகழ்வைத் திருவிளையாடற் புராணம் மண்சுமந்த படலத்தில் பார்க்கலாம்.

**கண்ணுத னந்தி கணத்தவர் விசும்பிற்**
**கதிர்விடு திப்பிய விமானம்**
**மண்ணிடை இழிச்சி அன்னைவா வென்று**
**வல்லைவைத் தமரப்பூ மழையும்**
**பண்ணிறைந்த கீத வோதையும் வேதப்**
**பனுவலும் துந்துபி யைந்தும்**
**விண்ணிடை நிமிரச் சிவனரு ளடைந்தோர்**
**மேவிய சிவபுரத் துய்த்தார்**

**(59)**

இத்திருவருட் செயல்களுக்குத் திருநாவுக்கரசு நாயனாருடைய தேவாரம் துணை நிற்கும்.

**தொடருந் தொண்டரை துக்கந் தொடர்ந்துவந்**
**தடரும் போதர னாயருள் செய்பவர்**
**கடலின் நஞ்சணி கண்டவர் கடிபுனல்**
**படருஞ் செஞ்சடைப் பாலைத் துறையரே**

**(5 - 516)**

**உற்ற வர்தம் உறுநோய் களைபவர்**
**பெற்ற பேறும் பிறங்கு சடையினர்**

**(5 - 532)**

அந்த ஞானத்தை ஆமோதிக்கின்ற தன்மைபோல அமைகின்றது பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமானுடைய இந்த செஞ்சொற்றமிழ்.....................
யார்க்கும்

**முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ.**

**(திருநகரச் சிறப்பு 47)**


## உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

# திருக்கோவில்களின் புனிதத் தன்மையைப் பேணுவோம்

*கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்*

ஆலயம் ஆண்டவனின் சந்நிதி. ஆலயத்தின் மறுபெயர் கோயில். கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் என்று பொருள். இறைவன் உயிர்க்கும் உயிரானவன் எம்மையெல்லாம் படைத்துக் காத்து அருள்பவன். இந்த உலகம் மற்றும் அண்டங்கள் யாவற்றினதும் கருத்தர். எங்கள் எல்லோரினதும் தலைவன் அத்தகைய இறைவன் எழுந்தருளி இருந்து அருள்பாலிக்கும் கோயிலில் அமைதி பேணப்படவேண்டியதும் தூய்மையை நிலவச் செய்ய வேண்டியதும் வழிபட்டுக் கொள்ளும் அடியவர்களின் பொறுப்பாகும்.

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. திருக்கோயிலுக் சாந்தியத்தை ஏற்படுத்திபவை அமைதியும் தூய்மையும் அடியார்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். வழிபடுபவர்கள் மனங் கொண்டால் கோயிலில் அமைதியையும் தூய்மையையும் இடம்பெறச் செய்யமுடியும். இவ்விரண்டும் கோயிலில் காணப்படுவதற்கும் காணப்படாமைக்கும் காரணம் அவர்களே.

இன்று நாம் வாழுமிடங்களிலோ சுற்றுப் புறங்களிலோ அமைதியைக் காண்பது அரிதாகி விட்டது. தூய்மையின்றி மண்ணும் வளிமண்டலமும் அசுத்தங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. புறத்தூய்மை மாத்திரமன்றி மனிதர்களிடம் அகத்தூய்மையும் வற்றிவிட்டது.

இந்நிலையில் தெய்வ சந்நிதியியை மக்கள் நாடி வருவது அமைதியையும் தூய்மையையும் தேடித்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கும் அவற்றைக் காணமுடியாவிட்டால் அவர்கள் வேறெங்குதான் போகமுடியும். எனவே அமைதியையும் தூய்மையையும் கோயிலில்களில் காப்பதை நாம் விரதமாகக் கொள்ள வேண்டும். காப்பது விரதம் என்பார்கள். உணவைச் சுருக்குவது அல்லது அருந்தாமல் விடுவது மாத்திரம் விரதமாகாது. அகப்புறத்தூய்மை பேணுவதும் அமைதி காப்பதும் விரதத்தின் முக்கிய அங்கமாகும். இதனைப் பலர் தற்காலத்தில் அநுசரிப்பதாகத் தெரியவில்லை. அதனால் விரதத்தின் முழுப்பயனையும் அவர்களால் பெற்றுக் கொள்ளமுடியாமல் போய்விடகின்றது. அமைதி, தூய்மை என்பவற்றை பேணுதலைச் சமயப் பழக்க வழக்கமாக இளம்பராயந்தொட்டே அனுசரித்து வருவதன் அவசியத்தை நாம் உணர்த்தல் வேண்டும்.

நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன கும்பாபிஷேகம் மூலம் தெய்வச் சிலைகள் பிரதிஷ்டை செய்யப் பெற்று தெய்வ சாந்தித்தியம் நிலவ வழிசெய்யப்படுகின்றது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகம விதிகளுக்குப் புறம்பாக எதுவும் நடைபெற நடைபெறக் கூடாது. நடைபெற அநுமதித்தலும் ஆகாது. இது பற்றி ஆகமங்களை அறிந்த சிவாச்சாரியார்கள் அவற்றை அறிந்து கொள்ளாதவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். ஆலய பரிபாலன சபையினரும் ஆவன செய்யவேண்டும். வழிபாடு செய்ய வருபவர்கள் திருக்கோயில்களில் செய்யத்தகாதனவற்றைச் செய்யவிடாமல் சிவாச்சாரியாரும் ஆலயபரிபாலனமும் பார்த்துக்கொள்ள வேண்டுயது அவசியம்.

சுவாமி விக்கிரங்களை,சிவாச்சாரியார்களைத்தவிர வேறெவரும் தீண்டக்கூடாது என்பது விதி. ஆனால் விக்கிரகங்களை,வழிபாடு செய்ய வருபவர்கள் பலர், தொட்டு அளைவதையும், கைகளினால் தீண்டுவதையும் இன்று சர்வசாதாரணமாகப் பார்க்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டு வந்து விக்கிரகங்கள் மீது வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியர்கள் பூசை செய்யும் போது மலர்கள் கொண்டு அர்ச்சிக்கிறார்கள். அந்த வேளையிலும் மலர்களை வழிபடுவோர்கள் விக்கிரகங்களில் போடுகிறார்கள். இவ்வாறு செய்தலும் ஆகாது.

சிலர் மணிகளைத் தாம் நினைத்த நேரங்களில் எல்லாம் அடிக்கிறார்கள். இதுவும் தவிர்க்கப்படவேண்டும். சுவாமி உலா வருவதற்கு பயன்படுத்தப்படும் தெய்வ ஊர்திகள், வாகனங்களில் ஏறி உட்காருவதையும் காண்கிறோம். சிறுபிள்ளைகளை வாகனத்தில் அமரச்செய்து போட்டோ படங்களை எடுக்கிறார்கள். சிறுபிள்ளைகளை உட்பிரகாரங்களில் ஓடி,ஆடி விளையாடவிட்டு வேடிக்கை பார்கிறார்கள். அவர்களின் பெற்றோர்கள் திருக்கோயில்கள் வேடிக்கைக்குரிய இடங்கள் அல்ல என்பதைப் பலர் உணர்வதாகத் தெரியவில்லை.

வீபூதிப்பிரசாதங்களை வாங்கி நிலத்தில் சிந்திவிடுகிறார்கள். மலர்களையும் பத்திரங்களையும் கீழே போட்டுவிடுவதால் பிறர் கால்களால் அவற்றை மிதிக்க நேரிடுகிறது. இவையெல்லாம் பாவச்செயல்கள். வீபூதியை இரண்டு கரங்களினாலும் பயபத்தியுடன் சிவாச்சாரியாரிடம் வாங்கி "சிவ சிவ" என்று சொல்லி நெற்றியில் அணிய வேண்டும். நெற்றியை நீட்டி,வீபூதியை அணிந்து விடும்படி சிவாச்சாரியாரை கேட்பது முறையன்று. சிவாச்சாரியாரும் அவ்வாறு செய்தல் ஆகாது. தீர்த்தத்தைச் சிவாச்சாரியாரிடம் இருகைகளாலும் வாங்கிப்பருகுதல் வேண்டும். தீர்த்தத்தை வாங்கித்தலையில் பூசுவதோ,வேறுஇடங்களில் தெளித்தலோ ஆகாது. அபிஷேகம் நடைபெறும் போது கோமுகி மூலம் வரும் நீரை சிலர் எடுத்து தீர்த்தமாகப் பருகுகின்றனர். அதுவும்முறையன்று. கூந்தலை விரித்து ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் போது இச் செயல்கள் ஆலயத்தின் தெய்வ சாந்தித்யத்தை பாதிக்கின்றன. இதனை உணர்ந்து ஆலயத்தில் விதிமுறைகளை அனுசரித்து நடந்து புனிதத்தையும் சாந்தித்யத்தையும் பேணி உய்வு பெறுவோமாக.


## சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**

கண் வைத்திய நிபுணர்கள்:
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr. சிவந்தா, 021-222 3149**
யாழ், போதனா வைத்தியசாலை

தொடர்புகளுக்கு:
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

# மகிமை பொருந்திய நவராத்திரி விரதம்

சிவஸ்ரீ. சு. செந்தில்ராஜக் குருக்கள்
தெல்லிப்பழை

சக்தி விரதங்கள் மிகச் சிறப்பான விரதம் நவராத்திரி விரதமாகும் வளர்பிறை பிரதமை தொடக்கம் நவமியீறாக வரும் ஒன்பது நாட்கள் இவ்விரதம் கைக்கொள்ளப்படும் சூதமுனிவரால் உபதேசிக்கப்பட்டதும் கந்தபுராணத்தில் சிறப்பித்து கூறப்படுவதுமானவிவ்விரதத்தை கிரதயுகத்தில் சுகேது மன்னனும் மனைவி சுதேவியும் வில்விரதத்தை அனுட்டித்து இழந்த ராஜ்ஜியத்தை அடைந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

இவ்விரதத்தில் வீரம் தைரியத்தை வேண்டி முதல் மூன்று நாட்களும் துர்க்கையையும், செல்வத்தை வேண்டி அடுத்த மூன்று நாட்களும் லட்சுமியையும், கலை, கல்வி, ஞானத்தை வேண்டி இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதியையும் வழிபடுவர்.

திதிகளின் சேர்க்கையால் நாட்கள் கூடி, குறைந்து வரும் அவ்வேளைகளில் சரஸ்வதியை மூல நட்சத்திரத்தில் ஆவாகானம் செய்து திருவோண நட்சத்திரத்தில் உத்வாகனம் செய்ய வேண்டும் இதைக்கொண்டு சரஸ்வதி பூஜையை தெரிவு செய்து மற்றய நாட்களை பிரித்துக் கொள்ளலாம். ஆனால் பிரதமையில் தான் கும்பம் வைக்க வேண்டும்.

இந்நாட்களில் ஸ்ரீசக்கர மகாயந்திர பூசை செய்வதும் லலிதா சகஸ்ர நாமம், லலிதாதிரிசதி, தேவி மஹாத்மியம் போன்ற நூல்களை பாராயணம் செய்வதும் செய்விப்பதும் மிகச் சிறப்பானது.

ஒன்பதாம் நாள் இரவு விஷேட அக்னிகார்யம், பலி, தானம் என்பன செய்து மகிஷாசுரவதமும் நடைபெறும் பத்தாம் நாள் காலை விஜயதசமி விழாவும் நடைபெறும்.

வி - ஒப்பற்ற, ஜெயம் - வெற்றி, தசமி - திதி. ஒப்பற்ற வெற்றியை தரும் தசமி திதி அன்றைய தினத்தில் பால்பருக்கு, காதுகுத்தல், ஏடு தொடக்கல், கலைகள் ஆரம்பித்தல், புதிய கணக்குகள் என்பன செய்வது மிகச் சிறப்பானதாகும். நவமியிலன்று புத்தகங்கள், வாத்தியக்கருவிகள் எமது தொழிலுக்கு பயன்படும் கருவிகள் எல்லாம் (ஆயுதம்) வைத்து பூசை செய்து மறுநாட்காலை தசமியில்தான் அதை எடுக்கவேண்டும்.

ஒன்பதாம் நாள் இரவு இல்லங்களில் சுமங்கலி பூசை, சுவாசினி பூசை, குமாரி பூசை செய்து மஞ்சள், குங்குமம், பட்டு, நாணயம், தாம்பூலம், கண்ணாடி, இனிப்புப் பண்டங்கள் கொடுத்து வழிபடுவது மிகச் சிறப்பானதாகும்.

ஆலயங்களில் கும்பம் வைத்து சிறப்புப் பூசைகள் செய்து விஜயதசமி அன்று அக் கும்பத்தை அம்மன் ஆலயங்களில் மூலாலயத்தில் தேவிக்கும் மற்றய ஆலயங்களில் கிணற்றிலோ, கேணியிலோ. கடலிலோ அபிஷேகம் செய்து கொள்ளலாம். எனவே இம் மகிமை பொருந்திய நவராத்திரி விரத விழாக் காலங்களில் அம்மனை வழிபட்டு உய்தி பெறுவோமாக.

# வாழ்த்துச் செய்தி

திருமதி சகிதேவி கந்தையா அவர்கள்
California

அன்பார்ந்த சிவத்தமிழ்ச் செல்வி அவர்கட்கு,

வணக்கம் பல, குவாய் ஆதீனம் சர்வதேச விருதை தங்கட்கு வழங்கப் போவதை சென்ற வருடமே Canada வில் நான் கலந்து கொண்ட விழாவில் தொண்டுநாதன் அறிவித்தார். வழங்கும் வைபவம் இவ்வருடமே நடைபெற உள்ளதால் நான் முன்பு தங்களை வாழத்தவில்லை.

குவாய் கோவிலை நேரில் தரிசிக்கும் பாக்கியம் ஐந்து ஆண்டுகள் கிடைத்தது. கண்ணிற்கும் மனதிற்கும் பெருவிருந்து பசுமையும் நீரோடையின் சலசலப்பும், வைலுவநதியின் சோவெனும் இன்னோசையும், உருத்திராக்க மரங்களின் குளிர்தரு வனப்பும் என நான்கு நாட்கள் எம் குருபரனின் அருளின் பரப்பை உணர முடிந்தது. தற்போதைய போதிநாதர் வேலன் சுவாமிகளும் மிகுந்த அமைதியும் அன்பும் கருணை முகமாய் எல்லோரையும் கவரும் ஆளுமை உடையவர்.

இவர்கள் பெறுமதி மிக உயர்ந்தது. தங்களை இவர்கள் கௌரவித்தது எமக்கு மிகுந்த மகிழ்ச்சி. கணவரும், நானும், பிள்ளைகளும் தாங்கள் பெற்ற கௌரவத்தின் பெருமையில் மகிழ்ந்து எமது வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உடல் நலம் பேணவும்.

அன்புடன்
சகிதேவி கந்தையா

## சரஸ்வதி பூசை செய்திடுவோம்

சரஸ்வதி பூசை செய்திடுவோம்
சகல கலைகளும் பெற்றிடுவோம்
கலைமகள் தாயை வணங்கிடுவோம்
கலைவாணியின் அருளைப் பெற்றிடுவோம்

நல்லவர் நாவில் உறைந்திடுவாள்
நலங்கள் யாவும் அருளிடுவாள்
திருவருள்க் கல்வியைத் தந்திடுவாள்
திருப்பாதம் என்றும் பணிந்திடுவோம்

ஆக்கம் :- துர்க்காம்பிகை

## நவராத்திரியில் வீற்றிப்பாள் துர்க்கை

வீரம் தருவாள் துர்க்கையே
வெற்றியும் தருவாள் துர்க்கையே
சக்தி தருவாள் துர்க்கையே
சகலதும் தருவாள் துர்க்கையே

அன்னையாய் வருவாள் துர்க்கையே
அகிலத்தைக் காப்பாள் துர்க்கையே
காளியாய் ஆனவள் துர்க்கையே
நவராத்திரியில் வீற்றிருப்பாள் துர்க்கையே

ஆக்கம் :- சுவர்ணா

சிறுவர் விருந்து:

# அவர் யோசித்தது எதனை?

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

**அன்பான பிள்ளைகளே!**

அன்பு வாழ்த்துக்கள், நலமாக இருக்கின்றீர்களா? நலமே ஆக அம்பிகை அருளைப் பிரார்த்திப்போம். நீலகண்ட தீட்சிதர் என்ற பெரியாருடைய வாழ்விலே நடந்த ஒரு அற்புத நிகழ்வை இப்போது சொல்கின்றேன்., கேளுங்கள்!

அரசர் திருமலைநாயக்கரும் நீலகண்ட தீட்சிதரும் வடநாட்டு யாத்திரை ஒன்று செய்தனர். அங்கே ஒருநாள் ஒரு சிவன் கோயிலுக்குப் போனார்கள். அந்தச் சிவன் கோயிலிலே ஐயனார் என்னும் அரிகரபுத்திரனுக்குத் தனிச் சன்னதி இருந்தது. அங்கே கோயில் கொண்டிருந்த ஐயனார் திருவுரு மிகஅழகாக அமைந்திருந்தது. அதிலே ஒரு விஷேசம் என்னவென்றால் அந்த ஐயனார் வலதுகை ஆள்காட்டி விரலை மூக்கின்மேல் வைத்து ஏதோ யோசனை பண்ணுவதுபோலே அமைக்கப்பட்டிருந்தது. இதனைக் கூர்ந்து பார்த்த மதுரை அரசன் திருமலை நாயக்கர், “இந்த ஐயப்பன் சிலை ஏன் இப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது? இதற்கு ஏதாவது கருத்து உண்டா?” என்று அங்கிருந்தவர்களை விசாரித்தார்.

“அரசே! இந்த ஐயப்பன் ஏதோ முக்கியமான ஒரு காரியத்தை யோசித்துக்கொண்டிருக்கின்றார் இவருக்கு அப்படி என்ன யோசனை? என்று யாராவது சொன்னால், இவர் தனது மூக்கின்மேல் உள்ள வலது கையை எடுத்து அபயகரமாகக் காட்டுவார் என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே வந்துபோன யாருமே ஐயப்பன் என்ன யோசிக்கிறார் என்று சரியாகச் சொல்லவில்லை. எத்தனையோ பெரியார்கள் பலவிதமாகச் சொன்னார்கள். எதுவுமே சரியாகவில்லை” என்று ஒரு முதியவர் சொன்னார்.

“அட அப்படியா?” என்று வியப்புற்ற அரசன் தானே பலவாறு யோசித்துச் சில கருத்துக்களைச் சொன்னார். ஆனால் அவர் எதிர்பார்த்ததுபோல நடக்கவில்லை. அவரது ஆர்வம் கூடியது. பக்கத்தில் வந்து நின்ற திட்சிதரிடம் கேட்டார் “தீட்சிதர் ஐயா! இந்த ஐயப்பன் எதைப்பற்றி யோசிக்கிறார்? சொல்லுங்கள் பார்ப்போம்.

இதுவரை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்த தீட்சிதர் திடுக்கிட்டார். ஒரு நிமிடம் தன் இஷ்ட தெய்வமாகிய மீனாட்சியை அம்மையைத் தியானித்தார், பின் சொன்னார்.

“அரசே! இவர் சிவபெருமானுக்கும், மோகினி வடிவு எடுத்த திருமாலுக்கும் மகனாகப் பிறந்தவர். சிவனார் அப்பா, திருமால் அம்மா. இப்போ சிவனாரின் மனைவியான உமாதேவியைக் கண்டால், ‘அம்மா!’ என்று கூப்பிட்டு வணங்கலாம். திருமாலின் மனைவியாகிய மகாலக்குமியை கண்டால் என்ன உறவு முறை கூறி வணங்குவது? அப்பாவின் மனைவி அம்மா? அம்மாவின் மனைவி என்ன உறவு? அதைத்தான் இவர் யோசிக்கிறார” என்றார் தீட்சிதர்.

உடனே நிஜமாகவே ஐயப்பன் திருவுருவில் மூக்கின்மேல் இருந்த வலது கை ஆள்காட்டி விரலோடு விலகி அபயகரமாக அமைந்துவிட்டது.

நேரிலே இந்த அற்புதத்தைக் கண்டு மதுரை மன்னரும் அங்கிருந்த எல்லோரும் “அரகர” என்று கூறி மெய்மறந்து நின்றார்கள்.

# நல்லவை தரும் நாயகி

திரு. கு. நவரத்தினராஜா அவர்கள்

மகாலட்சுமியை வேறு சொருபங்களில் ஆராதிப்பவர்களும் உண்டு. எந்த சொருபத்தில் ஆராதித்தாலும் 'அம்மை' என்ற அடிப்படைக் கருத்துடன் பக்தி பூண்டு ஒழுகவேண்டும். இத்தாயின் அடிமலர்களின் சோலையில்தான் சகல சௌகர்யங்கள், நவநிதிகளும் உதிக்கின்றன என்பர். நிதி, பதி, புத்திரர், மித்திரர், தவிசு, பவுசு, காரியசித்தி, ஞானசக்தி முதலான சௌபாக்கியங்களையும் அருளுவன மகாலட்சுமியின் திருவடி மலர்களே.

குழந்தை காலையில் விழித்ததும் அதன் முதல் எண்ணம் தாயின் திருமுகம்தானே அம்மாவின் புன்னகை புரிந்த முகத்தில் தவழும் கருணையும் அருளும் குழந்தையை ஆட்கொள்கின்றன. குழந்தையுடன் கொஞ்சத் துடிக்கும் செவ்விதழும் அந்த விலாச நெற்றியும், அதில் திகழும் குங்குமமும் புல்லாக்கு அணிந்த குழந்தையுள்ளத்தில் அழியாத சித்திரமாக பதிந்து விடுகின்றன. உலகத்தாயாகிய மகாலட்சுமியின் பக்தரும் இத்தகைய குழந்தைபோலிருக்கிறார்கள்.

குழந்தை அழும்போதும், கூப்பிடும்போதும் அம்மா வந்துவிடுவதுபோல் பக்தன் அழுதும் தொழுதும் மனம் உருகித்தோத்திரம் செய்து மகாலட்சுமியின் திருப்பெயர்களைப் பாடிக்கொண்டிருக்கையில் இந்த அம்மாவும் ஓடிவந்துவிடுகிறாளாம். இந்த மகாலட்சுமி எங்கும் வியாபித்திருக்கும் குழந்தைகளாகிய பக்தர்களுக்கு அருள் செய்யக் காத்திருக்கிறாளாம். ஆம் தாயின் தத்துவம் உலகெங்கும் பரந்திருப்பதுதான். இவளைக் காணும் பார்வை ஒன்றுதான் தேவை. ஆர் வந்தாலும் ஞானத்தாலும் அந்தப் பார்வையைப் பெறலாம்.

இத்தாயே நல்லவை தரும் நாயகி. நமக்கு நல்லன எவை என்பதைத் தாயே அறிவாள் என்பது பக்தர்கள் மனநிலை. இந்த மனநிலை இல்லாமல் 'அதுவேணும், இது வேணும்' என்று ஓயாமல் இச்சைகளைப் பெருக்கிக்கொண்டே லட்சுமித்தாயைப் பூசிப்பது சரியன்று. ஆணவப் பேய்க்கும் அன்புத்தாய்க்கும் ஒருங்கே பூசைபோட யாரால் இயலும்? அடிமைக்கு விடுதலை உண்டு. ஆனால் உள்ளத்திலே கள்ளத்திற்கு அடிமைப்பட்டால் முடிவும் உண்டோ?

நன்மை வேண்டுமென்றால், தீமை அணுகாதிருக்க வேண்டுமென்றால் லட்சுமியை தியானிக்கவேண்டும். தாயின் கருணைக்கு எல்லை இல்லை என்பதை நன்குணர்ந்து கொள்ளவேண்டும். கல்லைக் கனியாக்கும் கருணை உலக அன்னைக்கு உரியது என்ற நம்பிக்கை நிலைபெற வேண்டும். மகாலட்சுமியை 'கரு அம்பிகை' என்று கூறுவது பொருத்தமே.

நல்லவைதரும் இந்த நாயகியின் கருணை எல்லோருக்கும் உரியது. சிலருக்குத்தான் சிறப்புரிமை என்பது இல்லை. மக்களைத் தாங்கி அருளும் தாய் தன் மக்களிடையே வேற்றுமை பாராட்டுவதுண்டோ? எனினும் அன்பர்க்கு மெய்யன்பர்க்கு இக்கருணை விசேஷமாகப் பயன்படும் பொய்யரைத் தண்டிக்கவும் செய்யும் கணையே மாறக் கருணையாகித் தீயோர்களையும், பொய்யர்களையும் தண்டிக்கும் என்பதை பல்வேறு புராணக் கதைகள் வற்புறுத்துகின்றன.

திட புத்தியுடன் திடபத்தியும் சேர்ந்து கொண்டால் மகாலட்சுமியின் திருவருட் சிறப்பை பிரத்தியட்சமாக அறிந்து கொள்ளலாம் என்பர். (தாயே)என்னை ஆண்டருள்வாய். அம்மணீ! காத்தருள்வாய். மனம் திருந்தச்செய்வாய்! என்று உறுதி உள்ளத்துடன் பத்தி செய்வோருக்கு எப்போதும் நல்லது செய்ய துணை புரிகிறாள்திருமகள் "நீயே துணை,கைவிடாதே" விதி வழி செல்லட்டும் என்று விட்டு விடாதே" என்று தாயைப் போற்றினால் தாய் தன் திருவடியை அருளிக்காப்பாற்றுவது திண்ணம்.

தாயே அடைக்கலம் - அதாவது உனக்கே நான் அடைக்கலம் அம்மையே! சரணம். கமலையே! சரணம். நிமலையே சரணம். யத்மாசனி! போற்றி மங்கலை! போற்றி என்றெல்லாம் போற்றுகின்றவர்களுக்கும் '(கருணைவாரி! நமோநம! ஜயஜய! ஆரணீ! மங்களம்பூரணீ! மங்களம்சுந்தரி! மங்களம்! என்றெல்லாம் வழிபடுகிறவர்களுக்கு 'எழில்,அரசி! வாழி எல்லாச் செல்வங்களுக்கும் இருப்பிடமே! வாழி வாழி நின் நாமம் வாழி, நின் திருவடி என்றெல்லாம் வாழ்த்துகிறவர்களுக்கும் மகா லட்சுமி அருள் புரிவாழ் என்பதில் ஐயமில்லை. இத்தகைய மெய்யன்பர்களின் மனம் பட்ட மரம் துளித்தது 'கல்லும் கனிந்தது' என்பது போன்ற அற்புத நிலையில் தழைத்துப்பேறு பெறும் என்பர்.

நல்லவை தரும் நாயகியாகிய மகாலட்சுமிக்கு அடியவர் மனமே கோயில் என்றும் அடியவர்களே பரிவாரமும் படையும் என்று கூறுவதுண்டு,

**திருமாலின் மார்பதத்துச்**
**செல்வி போற்றி!**

என்பது இப்படை வீரர்களின் யுத்த கோஷம். இந்தக் கோஷத்தால் கவலை பயம் முதலிய அசுரகணங்கள் வெல்லப்படும் என்பது நிச்சயம்.

## *நவராத்திரியும் மகாலட்சுமியும்:*

நவராத்திரி ஒரு கலைத்திருநாள். சக்திபூஜையுடன் கொண்டாடும் கலைத்திருநாள். ஒன்பது நாட்களில் துர்க்கை, வரலட்சுமி, சரஸ்வதி முகிய மூன்று மூவகை ரூபமாக மகாசக்தி நவராத்திரி காலத்தில் வழிபடப்பெறுவதைக் காண்கின்றோம். எனவே சக்தி, மகாசரஸ்வதி என்றும் மகாலட்சுமி என்றும் மகாகாளி என்றும் சொல்லப்படுகின்றாள். மகாகாளியை இச்சாசொருபம் என்றும், மகாசரஸ்வதியை ஞானரூபம் என்றும் சொல்லி, மகாலட்சுமியை கிரியாரூபமானவள் என்றும் சொல்லுகிறார்கள். இம்மூன்று தத்துவங்களும் ஒன்று சேர்ந்ததே சண்டி என்ற சண்டிகா தேவி என்பர்.

குணங்கள் அற்ற பிரமம் குணங்களை ஏற்றுக்கொண்ட சகுணப்பிரம்மமாக காட்சி வழங்குவதுபோல் சண்டிகாதேவியும், மகாலட்சுமியாகக் காட்சி வழங்குகிறாளாம். ஆனால் இந்த மகாலட்சுமி ஸ்ரீ வைஷ்ணவர்கள் வழிபடும் திருமாலின் தேவியான மகாலட்சுமி அல்லள். தாந்திரிகர்கள் என்ற தந்திர சாஸ்திர நிபுணர்களின் மகாலட்சுமி இவள். இவளையே மகிஷாசுரமர்த்தனி என்கிறார்கள். இம்மகாலட்சுமியின் சத்தசத்துவ அம்சம்தான் மகாசரஸ்வதி என்றும், சுத்த அம்சம்தான் மகாகாளி என்றும் சொல்வதுண்டு.

தாந்திரிகர்களின் மகாலட்சுமி சுந்தரியாகவும் பயங்கரியாகவும் ஒருங்கே காட்சியளிக்கிறாள் இவளுடைய அருள் வெள்ளம் பொங்கிப் பெருகி வாழ்விப்பதுபோல் அழிப்பதும் உண்டு. இவள் அன்பு தென்றலாகத் தவழ்வது போல் சண்டமாருதமாகச் சுழன்று வீசி மண்ணையும் விண்ணையும் புழுதிப்படுத்துவதும் உண்டு. ஆனால் வைணவர்களின் மகாலட்சுமியோ திருமாலின் திருத்தேவி. இவள் சீறி அழிப்பதில்லை. இவள் என்றும் சுந்தரிதான்.

அறியாமையுடனும் மிருகத்தன்மையுடனும் துஷ்ட அசுரசக்திகள் மகிஷாசுரனின் தலைமையில் உலகத்தைப் பாழாக்கி வந்த காலத்திலே மும்மூர்த்திகளும்கூட அஞ்சித் தங்கள் மக்களைக் கைவிடத் தீர்மானித்துவிட்டார்கள். என்றும் எனினும் அவர்களுடைய தேவிமார் தாய்க்குலமானதால் எப்படியாவது மக்களைக் காப்பாற்றிவிட வேண்டுமெனத் துணிந்தார்கள் என்றும் நவராத்திரி கதை ஒன்று கூறுகிறதல்லவா? அந்தத் தாய்மார்களில் மகாலட்சுமி முக்கியமான பங்கை மேற்கொண்டவளாம். லட்சுமியும், பார்வதியும், சரஸ்வதியும் துர்க்காலட்சுமி என்ற ஓருருவத்தில் வெளிப்பட்டார்களாம். துர்க்கா லட்சுமி ஒன்பது நாள் விரதம் பூண்டிருந்து பத்தாம் நாளில் மகிஷாசுரனை வென்று மகிஷாசுரமத்தனியாக வெற்றிக் கோலத்தில் திரும்பி வந்தாள் என்று நவராத்திரி கதை தெரிவிக்கின்றது.

பயங்கரிதான் மகிஷாசுரமத்தனி அந்தக்கொடியபோர் அப்படி ஆக்கிவிட்டது இந்த உலக அன்னையை. எனினும் இந்தப்பயங்கர சொருபத்தையும் ஊடுருவிக்கிடந்ததாம் சௌந்தர்யம். உலகங்களை எல்லாம் மோகிக்கச் செய்யும் சௌந்தர்யம். இந்தச் சௌந்தர்யம் அழகுத் தெய்வமாகிய லட்சுமி தேவிக்கு உரியதுதான் மகிஷாசுரமத்தனியின் ஞானம் சரஸ்வதி தேவிக்கு உரியது. மகிஷாசுரமத்தனியின் மோகன சக்தி திருமாமகளின் கொடைதான்.

நவராத்திரியின் கதைகளில் பெரும்பாலும் சக்திதேவியின் புகழே பேசப்படுகிறது.. எனினும் லட்சுமி தேவியைப் பற்றிய பிரஸ்தாபமும் இடைக்கிடையே வருவதைக் காணலாம். உதாரணமாக மங்கையர்களின் மதிமயக்கம் பற்றிய கதையைப் பார்க்கலாம். இக்கதையில் திருமாலை யோக நித்திரைக்கு உட்படுத்தியிருந்த அந்த நித்ராதேவி ஒரு மகாமோசமான சொருபமாக வெளிக்கிட்டு அசுரர்களை மயக்குவதையும் காண்கிறோம். இவளை ஜோதி ருபமான வைஷ்ணவி என்றும் கதை சொல்கிறது.

இந்த யோகநித்திராதேவியின் அழகு லட்சுமியின் அழகுதான் என்று ஊகிக்கலாம். 'அழகிய பொருள்கள் எல்லாவற்றையும் விட நீ மிக்க அழகு வாய்ந்தவள்' என்று போற்றினான் பிரம்ம தேவன். இத்தகைய பாராட்டு அழகுத் தெய்வமாகிய மகாலட்சுமிக்கே தானே உரியது.

அழகு கலைஞர்களையும் நல்லவர்களையும் வாழ்விக்கிறது. துஷ்டர்களை மயக்கிக் கெடுக்கிறது. எத்தகைய சக்தியாலும் எதிர்க்க முடியாது. துஷ்டர்களையும் அழகின் மோகன சக்தி எதிர்த்து மயக்கி மாய்த்து விடுகிறது. உலகங்களை வென்றும் புலன்களை வெல்லத் தெரியாத மங்கையர்களை வென்று விடுகின்றது. யோகநித்திராதேவி என்ற மகாமாயையின் அழகு. இந்த அழகுத்தேவி சொருபத்தின் அம்சமான மகாலட்சுமியின் அழகுதான் என்பது குறிப்பு.

சண்டிகாதேவியின் பேராற்றலைப் போல் பேரொளி வனப்பும் தேவிக்கு வெற்றி தருவதைக் காண்கின்றோம். இவளது வீர சௌந்தர்யத்தில் வீரம் - துர்க்கைக்கும், சௌந்தர்யம் - லட்சுமிக்கும் உரியன எனலாம். விண்ணிலும் மண்ணிலும் காணப்படுகின்ற அழகுகளெல்லாம் மகாலட்சுமியின் அழகுகளே என்று கூறுவதுபோல் சண்டிகாதேவியின் அழகுகளையும் மகாலட்சுமியின் அழகுதான்தான் என்று கூறுவதில் தவறொன்றுமில்லை. தளிர்க்கையில் வாள்பிடித்துவந்த தேவியைத் தியானிக்கும் பக்தர்கள் அந்தத் தளிர்க்கையில் லட்சுமியையும் வாளில் துர்க்கையையும் அந்த உறுதி உள்ளத்தில் சரஸ்வதியையும் தரிசித்தார்கள் எனலாம்.

காலனாகவந்த காதல் என்பதும் நவராத்திரி கதைகளில் வரும் ஒன்று. சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களை அழிப்பதற்குத்தேவி ஆயுத்ததைப் பயன்படுத்திக் கொண்டதுபோல் தன் அழகையும் காட்டி மயக்கி உலகத்தை வாழ்வித்தாள் என்று கதை தெரிவிக்கின்றது. தேவியின் இந்தப்பேரழகு அழகுத்தெய்வமாகிய லட்சுமியின் அழகுதானே. அசுரர்களின் வீர வெற்றியை அவர்களுடைய காம வெறியே அழித்தது என்று சொல்லும்படி அல்லவா தேவியின் இந்தப் பேரழகு நிகழ்ந்தது.

நவராத்திரி கொலுவின் தத்துவத்திலும் லட்சுமியின் அழகுத் தத்துவத்திற்கு ஒரு சிறப்பான இடமுண்டு. அம்பிகையின் விக்கிரகம் எவ்வளவு அழகாய் அலங்கரிக்கப் பெறுகின்றது வீடுகளில்தான் பொம்மைகளை எத்தனை வகைகளில் கொலு வைத்து அலங்காரம் செய்கின்றோம் கன்னிகைகளில் ஒவ்வொருத்தியும் அலங்காரம் செய்து கொண்டு வீடு வீடாகச் செல்லும்போது வந்த பெண்களுக்கு சந்தனம், தாம்பூலம், மஞ்சள், குங்குமம் முதலியவற்றை வழங்கும்போதும் லட்சுமியின் ஒளியும், அழகும் அங்குமிங்கும் திகழ்வது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படத்தான் செய்கிறது.

விஜயதசமி கொண்டாடும்போதும் காளியின் வெற்றிப் பெருமிதத்துடன் லட்சுமியின் சௌந்தர்ய வெற்றியும் நினைவிற்கு வருகிறது. ஆலயங்களில் அம்பு போடும் ஐதீகத்திலும் அரசர்கள் தர்பார் கூட்டி மாலை வேளையில் அம்பு போடச் சென்ற வழக்கத்திலும் கூட மகாசக்தி மகாலட்சுமியாகவும் தரிசனமளித்தாள் என்று சொல்லாம்.

**தாயின் செல்வச் சிறப்பு:**

லட்சுமித்தாய்க்கு அழகே செல்வம், உண்மை ஐஸ்வர்யமே அழகு. பிறவிக்கு முந்திய நிலையிலிருந்து உயிர் பெற்று விழிக்கும் மனிதன் தாயின் மடியிலே விழித்துக்கொள்கிறான் வாழ்க்கையின் அதிகாலை வேளையில் தாயின் முக மலர்ச்சியைக் கண்டுகொள்கிறோம். 'தாயின் அழகே அழகு, தாய் தரும் செல்வமே செல்வம்' என்ற உணர்ச்சி மேலும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

பூவைப் பார்க்கின்றான், தாயின் புன்னகைப் பொலிவுதான் அது! சந்திரனைப் பார்க்கிறான், தாயின்முகத்திரள் நட்சத்திரங்களைப் பார்க்கிறான் தாயின் வயிரமணிகள் அவை! எல்லையற்ற வானவெளி அவள் பரந்த நெற்றியையும், நீலக்கடல் அவள் கூந்தலையும் நினைவூட்டுகின்றன. பெற்றதாய் உலகத் தாயாகிய மகாலாட்சுமியை நினைவூட்டுகிறாள்.

தாய்ப்பால் பருகி வளர்ந்திருக்கும் மனிதன் இயற்கையன்னையின் அழகைப் பருகி நுட்பமான ஆன்ம வளர்ச்சியும் பெறுகின்றான். தாய்மையின் பெருமையுடன் உலக அன்னை வழிபாட்டின் உட்பொருளையும் மக்கள் எதிர்காலத்திலே அதிக அளவில் உணர்ந்து கொள்ளவர்கள் என்று கருதலாம்.

இயற்கையன்னை தன் அழகால் இதயத்துக்கு உணவு தருவது போல வயிற்றுப்பசிக்கும் ஏராளமான உணவை உதவுகிறாள். தாகத்துக்கு தண்ணீர் தருகிறாள், மூச்சுக்காற்றை தருகிறாள். சூரியஒளி என்ற உணவையும் தருகிறாள். இப்படியெல்லாம் இயற்கைத் தாய் உதவவில்லை என்றால் ,எப்படி மனிதன் வாழமுடியும்? தாய் செய்த உதவியை நினைத்து பார்த்தால்,

**அன்னம் ஊட்டிய**
**தெய்வ மணிக்கையால்**
**ஆணைகாட்டில்**
**அனலை விழுங்குவோம்!**

என்று சொல்லவும் தோன்றுகின்றதல்லவா? இயற்கை தாயாகத்தன்னை வெளியிட்டுக்கொள்ளும் மகாலட்சுமி விஷயத்திலும் இத்தகைய உணர்சி ஏற்படவேண்டும்.

தன் உடலையும் உயிரையும் குழந்தைக்காக தியாகம் செய்யத்துணிந்தவள் தாய். இந்ததாய்யுள்ளம் குறித்து சிந்தித்து பார்க்கும் உண்மைப் புதல்வன்.

**"போற்றி தாய்" என்று**
**தோள்கொட்டி ஆடுவீர்!**

என்ற பாரதி வாக்கின் உட்பொருளை நன்குணர்ந்து கொள்வான்.

தாய்க் குலமாகிய பெண்குலத்தின் பெருமையை உலகம் நன்குணர்ந்து போற்றும் போது! பெண்மையிலும் தாய்மையிலும் உலக அன்னையின் சக்திக்கும் அருளுக்கும் சான்று காண்பது எளிதாகும். பெண்மையையும் தாய்மையையும் போற்றத்தெரியாத இதயத்திற்கு உலக அன்னையாகிய லட்சுமி பக்தியும் தெளிவு படுவதில்லை.

பாரதியார் புதுமைப் பெண் குறித்து பாடிய தமது பாட்டிலே உலகத்தைப் புதுமையுறச் செய்யும் ஆற்றல் புதுமைப் பெண்ணொளிக்கே விஷேசமாக உரியது என்கிறார். பராசக்திதேவியே ஒரு புதுமைக் கன்னிகையாகத் தம் அகக் கண்ணுக்கு இலக்காகி இந்த உண்மையை உணர்த்தியதாகவும் சொல்கிறார்.

**ஆற்றல் கொண்ட பராசக்தி**
**அன்னை நல் அருளினால்**
**கன்னிகை ஆகியே**
**தோற்றி உண்மைகள் கூறிட**
**வந்திட்டான், செல்வம் யாவினும்**
**மேற் செல்வம் எய்தினோம்**

என்பது பாரதி வாக்கு.

பெண்மையின் பெருமையாக உள்ளவாறு உணர்ந்துகொண்ட பாரதியார் பராசக்தி அன்னையின் வழிபாட்டையும் உய்த்துணர வைத்திருப்பது இவ்வளவு பொருத்தமானது! டாக்டர் அணி பௌண்ட் ஒரு சமயம் உலக அன்னையைக் குறித்துப் பேசும்போது. ”இந்த அன்னையை அறிவால் ஒரு தெய்வ அம்சம் என்று அறிந்து கொள்வது போதாது. தாய்மையின் சக்தி முழுவதையும் சொருபமாய்க் கொண்ட ஒரு பிரத்தியட்ச தெய்வமாக உலக அன்னையை மறவாது வழிபடவேண்டும் என்றார். பாரதியாரின் பராசக்தி இத்தகைய உலக அன்னைதான். மகாலட்சுமியும் இத்தகைய உலக அன்னையாகவே வழிபடுவதற்கு உரியவள் ஆவாள்.

பராசக்தியைக் குறித்துப்பாடும் பாரதியார், யாதுமாகி நின்றாய் என்கிறார். 'எங்கும் நீ நிறைந்தாய்' என்கிறார். காளி தேவியின் லீலையே உலகம் எனக் காண்கிறார்.

**பூதம் ஐந்தும் ஆனாய் - காளி!**
**பொறிகள் ஐந்தும் ஆனாய்!**
**பேதமாகி நின்றாய் - காளி!**
**பொறியை விஞ்சி நின்றாய்!**

என்றெல்லாம் பாரதியார் பாடும் காளி உலகமெல்லாம் ஒருயிராய் தழுவிக் காக்கும் அன்னைதான். இத்தகைய அன்னைதான் தன் அழகுச் சிறப்பாலும் செல்வச் சிறப்பாலும் உலகை அணி செய்திருக்கும் மகாலட்சுமியும் பராசக்தியை 'ஆனந்தத்தின் எல்லையற்ற பொய்கை' என்று போற்றும் பாரதியார் இந்த அன்னயின் மகாசக்தியையும் மகத்தான அருளையும் ஒருங்கே உணர்ந்து பாடியிருக்கிறார்.

**நம்பினோர் கெடுவதில்லை**
**நான்கு மறைத் தீர்ப்பு**
**அம்பிகையைச் சரண் புகுந்தால்**
**அதிக வரம் பெறலாம்**

என்ற நம்பிக்கையுடன் பராசக்தியைப் பாரதியார் உலக அன்னையாகவும் பாரதசக்தியாகவும் தமிழன்னையாகவும் சுதந்திர தேவியாகவும் கண்டு களித்திருக்கிறார்.

லட்சுமி பக்தர்களும் உலக அன்னையாகிய லட்சுமி ஆனந்தத்தின் எல்லையற்ற சமுத்திரம். லட்சுமியின் அழகுக்கும் எல்லையில்லை, சக்திக்கும் எல்லையில்லை. மகா விசுவாசத்துடன் உபாசிப்பவர்களுக்கு மகாலட்சுமி நலன்தரும் செல்வங்களை எல்லாம் பொழிந்து கொடுக்கிறாள் என்பதும். இந்த அம்மையைக் குழந்தையுள்ளத்துடன் சரண் புகுந்தால் நல்ல வரங்களையெல்லாம் அபரிதமாகப் பெறலாம் என்பதும் லட்சுமி பக்தர்களின் நம்பிக்கை.

பக்தன் லட்சுமியை உலக அன்னையாக மட்டுமா கண்டு களிக்கிறான்? தன் சொந்தத் தாயையும் மகாலட்சுமியாகக் கருதுகின்றான். தாய்மையில் சிறப்பாக மகாலட்சுமியைக் காண்பதுபோல் பெண்மையிலும் பொதுவாக இலட்சுமியைக் காண்கின்றான். இந்த உபாசகனுக்கு வீடும் லட்சுமி மயம், உலகும் லட்சுமி மயம், நாடும் லட்சுமி மயம், உலகமெல்லாம் லட்சுமிமயம்தான்.

## கொஞ்சமோ செல்வம்:

லட்சுமியின் குடும்பம் மிகவும் பெரியது. எத்தனை மக்களை இந்தத் தாய் போஷிக்க வேண்டியிருக்கிறது. கவனிக்க வேண்டியிருக்கிறது எனவே மகாலட்சுமி எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கிறாள் என்று கருதலாம். உலக மெல்லாம் இவள் வீடுதான் பரமபதமும் பாற்கடலும் திருமாலின் மார்புதான் இவன் இருப்பிடம் என்பதில்லை. 'உயிர்க்குலமெல்லாம் என் குடும்பம்' என்று திருவாய் மலர்ந்தருளும் இந்த அன்னைக்கு அவளுடைய வீட்டுப்பணியில் நாமும் இயன்ற உதவி செய்யவேண்டுமல்லவா? இது திருமாமகளின் மெய்யன்பர்களுடைய மனநிலை.

ஏழை ஒருத்திக்கும் குடும்பம் பெரிதாக இருந்தால் குடும்பப் பரிபாலனம் மிகவும் கஷ்டமானதுதான் மகாலட்சுமிக்கோ எல்லையில்லாத செல்வம் குடும்பப் பரிபாலனத்திற்கு உதவச்சித்தமாயிருக்கிறது. மண்ணிலும் விண்ணிலும் உள்ள அழகுச் செல்வங்களுக்கும் பக்திச் செல்வங்களுக்கும் கணக்கு உண்டா? அருட் செல்வத்திற்குத்தான் எல்லையுண்டா?

அன்னையின் அருள்சார்ந்த கடைக்கண் பார்வை ஒன்றிலேயே எவ்வளவு செல்வம் இருக்கிறது. எவ்வளவு சக்தி கொழிக்கின்றது! இந்த அருள்நோக்கைப் பெறுவோமானால் நமக்கும் உலகப் பணிபுரியும் ஆற்றலும் வசதிகளும் கிடைக்கும். அன்னையின் உலகப் பணியில் நாமும் ஆனந்தமாக ஒத்துழைக்க முடியும். ஆம் அன்னையின் பணிதான் ஆனந்தம் உண்மையான உலகப்பணி அன்னையின் பணிதான்.

'கைங்கர்ய ஸ்ரீ' பணியையும் லட்சுமியின் அம்சமாகச் சொல்லுகிறார்கள் இது முற்றும் உண்மையானது. கைங்கர்யம் உயிர், கைங்கர்யம் வழிகாட்டி, நெறிகாட்டும் லட்சுமி, சக்தியின் இன்றியமையாத அம்சம். ''வாழவேண்டுமா? அப்படியானால் 'பணிசெய்து வாழுங்கள்' என்கிறது அன்னையின் குரல். கைங்கர்யமாகக் கனியாத மலடு என்கிறாள் அன்னை. இந்தக் குரலில் வாழ்க்கையின் நோக்கத்தையும் இரகசியத்தையும் ஒருங்கே வெளியிடுகிறாள் அன்னை. தன் அருமை மக்களுக்கு பணிபுரிய வாழுங்கள், வாழப் பணி புரியுங்கள் என்ற அன்னையின் குரல் மோன வாக்காக மகாலட்சுமியின் மெய்யன்பர்களுடைய இதயத்திலே தெளிவாகக் கேட்கிறது.

அன்னையின் வடிவங்கள் பலவற்றுள் துர்க்கை வடிவம், மனித இதயத்தைப் பாழாக்கும் ஆணவம் பேராசை முதலான அசுர கணங்களையும் வென்று வலியழிக்கிறது. இந்தத் துர்க்கை வடிவம் கோபத்தைக் கோபிக்கின்றது., பயத்தைப் பயமுறுத்துகின்றது. துன்பத்திற்கு துன்பம் ஆகிறது.

உலக அன்னையின் சரசுவதி வடிவம் அறிவு காட்டுகிறது. ஆராய்ச்சியைத் தூண்டுகிறது. அறியாமையை வெல்லுகிறது. அறியுந் தோறும் அறியாமையைக் காட்டி மெய்யறிவின் இயல்பையும் உணர்த்துகின்றது. அறிவு தூய்மை பெறுவதற்கும் சரஸ்வதியின் அருள் வேண்டும் வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை என்பதையும் நினைவூட்டுகின்றாள். வெண்ணிற மேனியளான சரஸ்வதி அறிவின் சிகரத்தில் குழந்தைபோல் இருக்கவேண்டும் என்பது இந்த அன்னயின் உபதேசம்.

உலக அன்னையின் மகாலட்சுமி வடிவமோ அழகுணர்ச்சியைத் தூண்டி அறிவையும் செம்மைப்படுத்துகின்றது. சக்தியையும் செம்மைப்படுத்துகின்றது வரங்களையெல்லாம் கைம்மாறு கருதாத மேகம்போல் வரப்பிரசாதமாகப் பொழிகின்றது லட்சுமி வடிவம். குரு என்ற நிலையையும் இந்த அன்னையிடம் காண்கிறோம். குரு சீடர்களுக்கு அளிக்கும் செல்வத்தில் ஞானச் செல்வம் உண்டு. அருட் செல்வமும் அதிமுக்கியமானது. இந்த அருட் செல்வத்தைக் குருமூர்த்தி மகாலட்சுமியின் வரப்பிரசாதமாக வழங்குகிறார் என்பர்.

உலக அன்னைக்கு வடிவங்கள் பல. மூன்று வடிவங்கள் முக்கியமாவை. இந்த வடிவங்கௌல்லாம் ஒரே அன்னையைத்தான் நினைவூட்டுகின்றன. ஞானிகள் பார்வையில் ஒருமையையும் ஒருமையில் பன்மையையும் காண்பார்கள் அல்லவா? உலக அன்னையின் பக்தர்களும் ஒரே தேவியை மகாலட்சுமி சரஸ்வதி காளி என்ற மும்மைப்பெருந் தெய்வங்களாகவும் இந்த மும்மைப் பெருந்தேவியரையும் ஒரே தெய்வமாகவும் காண்கிறார்கள். எனவே நல்லவை தரும் நவராத்திரி நாயகியை வழிபடுவோம்.

நன்றி

**லட்சுமி வரலாறும் வழிபாடும்**

# கேதாரகௌரி நோன்பு மகத்துவம்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்கள்

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

கைலயங்கிரியின் சிகரத்தில் உமாசமேதராய் விளங்கும் பரமசிவன் பக்தகோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபை ஒன்றை ஏற்படுத்தி அதிலே வீற்றிருக்கின்றார்.

அங்கே தேவவாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடன விசேஷங்கங்களை நடித்துக் காட்டுகிறாள்.

அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கிமகரிஷி பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றாள். தேவர்கள் ஆனந்தத்ததால் சிரித்து மகிழ்கிறார்கள்.

பார்வதக்குகை அச் சிரிப்பொலியால் கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவன் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியைக் கௌரவித்துபாராட்டுகிறார்கள். அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியோடு பார்வதியை நீக்கிப் பரமசிவனை மாத்திரம் வலம் வந்து வணங்குகிறார் இதைக் கண்டு,

“சுவாமி, இந்தப் பக்தன் என்னை விட்டு தங்களை மட்டும் வணங்கிச் சென்றாரே. அதற்குக் காரணம் என்ன இந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விளக்கவேண்டும் என்று தேவி கேட்கின்றாள்.”

“தேவி, சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முக்தி நிலையை விரும்பி நிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரியோசனமில்லையென்ற திடசித்தம் கொண்டார். அதனாற்றான் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார்” என்று பரமசிவன் பார்வதிக்கு விளக்கம் கூறுகின்றார். பார்வதிதேவி வருத்தப்பட்டு பரமசிவனிடத்துக் கோபம் கொள்கிறாள். கோபாவேசத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கி மகரிஷியினின்றும் அகலக் கடவது என்று வாய்விட்டுக் கூறியும் விடுகின்றாள். பிருங்கி மகரிஷியின் உதிரம் பிழிந்து சக்கையாகின்றது அவர் நிற்பதற்கும் முடியாமல் தள்ளாடுகின்றார். அப்போது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கின்றார். பிருங்கி தண்டின் உதவியோடு தன் ஆச்சிரமம் போய்ச்சேருகிறார்.

தேவிக்கு மேலும் கோபம் உண்டாகின்றது. கையிலையை விட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடம் மழை இன்றி வாடிக் கிடந்த விருட்சங்களெல்லாம் மலர்ந்து மணம் வீசுகின்றன. வால்மீகி மகரிஷி அவ்வனத்துக்கு வருகிறார். 12 வருடம் மழை இல்லாமல் வாடிக் கிடந்த விருட்சங்களெல்லாம் தளிர்துப் பூத்து மணம் வீசுவதைக் கண்டு அதிசயிக்கிறார். வனத்தில் இந்த அற்புதம்! அங்கு வந்திருப்பவர் யாராயிருக்கலாம் என்று தேடிப்பார்க்கின்றார். பார்வதிதேவி ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் எழுந்தருளியிருப்பதைக் காண்கின்றார்.

தேவி, தாங்கள் கைலாசகிரியை விட்டு இப்பூலோகத்திற்கு எழுந்தருள்வதற்குக் காரணம் என்ன? என்று கேட்டு விடுகின்றார். தேவி தான் பூலோகத்திற்கு வந்த கதையைச் சொல்கிறாள். வால்மீகி மகரிஷி தேவியைத் தனது ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்கிறார். தேவியும் ஆச்சிரமத்திற்கு சென்று வால்மீகி மகரிஷி தேவிக்கெனத் தனியாக அமைத்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து, "மகரிஷியே, பூலோகத்தில் நான் விரதம் ஒன்று அனுட்டிக்க வேண்டும். மேலான விரதம் ஒன்று இருக்குமேயானால் அதனை எனக்குக் கூறுங்கள் என்றாள். மகரிஷி, "தாயே தாங்களே விரதமுகத்தோடு எழுந்தருளியிருக்கிறீர்கள். அதைவிடவா பூலோகத்தில் சிறந்த விரதமொன்றுண்டு." என்றுகூற தேவி, புன்னகை பூத்து தன் விரதத்தை ஆலவிருட்சத்தின் கீழமர்ந்து ஆரம்பிக்கின்றாள். மணலினாலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனாகப் பாவித்து பூஜை செய்கின்றாள். 21 நாள் பூஜை நிகழ்கின்றது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்லவுருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சளுருண்டை நைவேத்தியமாக வைத்து தூபதீபம் காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்துத் திரித்து 21 முடி முடித்து ஈஸ்வரனை தியானம் செய்து காப்பும் கட்டுகிறாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சி கொடுத்து "தேவி உமக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்கிறாள். தேவி ஈசனைப் பார்த்து "உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டும்" என்று கேட்டு விடுகிறாள். 'ஆகட்டும்' என்கிறார் ஈஸ்வரன். பார்வதிதேயும் பரமசிவன் மேனியில் பாதியாய் இருக்கும் பாக்கியத்தையும் பெறுகிறாள்.


"என்னை நோன்பு நோற்று வரம் பெற்ற உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுட்டிக்கிறார்களோ. அவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவதர்கள்" என்ற வரமும் நல்கி பரமசிவன் பார்வதி சமேதராய் அர்த்தநாதீஸ்வர வடிவத்தோடு கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து கௌரி நோன்பு பூலோக வாசிகளால் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. இக்கௌரி நோன்பை அனுட்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர்.

நோன்பு நோற்று வரம் பெற்ற பராசக்தியை நோக்கி இவ்விரதம் அனுட்டிக்கப் படுவதால் இது கௌரிநோன்பென அழைக்கப்படுகிறது. இவ்விரத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கற்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை, வலம் வருதல் என்பனவாகும். ஆகவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரத்ததை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கதாகும். விரும்பினால் அவரவர் இல்லங்களிலும் இதனைச் செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலை அமையவேண்டும். இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்துப் பூஜை செய்தல் மேலானது. 21 நாள் இவ்விரதத்தை அனுட்டிக்க முடியாதவர்கள் இறுதிநாளில் எல்லாப் பூஜையையும் முடித்துக் கொள்ளலாம். ஆனால் வருடாவருடம் தொடர்ந்து அனுட்டிப்பதே முக்கியமானதாகும். இதனால் வாழ்க்கைப்பேறு, முத்திப்பேறு ஆகிய இரு பெரும் பேறுகளும் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை என்பதைக் கௌதம முனிவர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

எமது கண்கண்ட தெய்வமாகிய துர்க்காதேவி கோயில் கொண்டருளும் தெல்லிப்பழையில் கடந்த பல ஆண்டுகளாக இவ்விரதத்தை இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அடியார்கள் அனுட்டித்து வருகிறார்கள். ஐப்பசி அமாவாசையிலன்று இது ஒரு கண்கொள்ளா அருட்காட்சியாகும். அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் மேலும் மேலும் இத்தகைய ஆனந்த அனுபவம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக. இந்நாட்களில் பாராயணம் பண்ண வேண்டியவற்றை இங்கே தருகிறோம்.

உ

# ஸ்ரீ லிங்காஷ்டகம்



ராகம் : யமுனாகல்யாணி (அ) ராகமாலிகை                    தாளம் : ஆதி

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூசித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பரப விநாசன லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பத்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸரவர பூஜித லிங்கம்
ஸுரவண புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாசிவ லிங்கம்

— ஸ்ரீமத் சங்கர பகவத்பாத சுவாமிகள்

உ

# திருக்கேதாரம்

### திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடிய

# தேவாரம்

பண் - செவ்வழி (2ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

பாதம்விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே.

முந்திவந்து புரோதாய மூழ்கி முனிகள் பலர்
எந்தைபெம்மா னெனநின்றி றைஞ்சும் இடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தம்நாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே.

உள்ளமிக்கார் குதிரைம் முகத்தார் ஒரு காலர்கள்
எள்கலில்லா இமையோர்கள் சேரும் இடமென்பரால்
பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாதுபோய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே.

ஊழியூழி புணர்வார்கள் வேதத்தினெண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி றைஞ்சும் இடமென்பரால்
மேழிதாங்கி யுழுவார்கள் போலவ்விரை தேரிய
கேழல்பூழ்தி கிளைக்க மணிசிந்துங் கேதாரமே.

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தை யுடையார்கள் சேரும் இடமென்பரால்
ஏறிமாவின் கனியும்பலா வின்இருஞ் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொ டுண்டுகளுங் கேதாரமே.

மடந்தைபாகத் தடக்கிம் மறையோதி வானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல் வினைதீர்க்க நின்றார்க் கிடமென்பரால்
உடைந்தகாற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல் லறைகள்மேல்
கிடந்தவேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே.

அரவமுந்நீர் அணியிலங்கைக் கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலா லடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங் கோங்கங் குளிர்பிண்டி ஞாழல்சுர புன்னைமேல்
கிரமமாக வரிவண்டு பண்செய்யும் கேதாரமே.

ஆழ்ந்துகாணார் உயர்ந்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்து செற்று நிழற்கிறங்கும் வேழத்தின்வெண் மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே.

கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பா ரவரெய்த வொண்ணா இடமென்பரால்
அடுக்கநின்றவ் வறவுரைகள் கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்கின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே.

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பேறுவரே.

திருச்சிற்றம்பலம்

**சுவாமி - கேதாரநாதர்; தேவி - கேதாரகௌரியம்மை.**

## அபிராமி அந்தாதி

**மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி**
**குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்**
**பனிதரு திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த**
**புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.**

# முருகனும் வேலும்

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P

நன்மைக்கும் தீமைக்கும் இடையே எப்போதும் போட்டியிருந்துகொண்டே இருக்கும். ஆனால் அப்போட்டியில் இறுதியாக நன்மைதான் வெற்றியடையும் என்பதை எல்லாரும் உணர்வர். ஆனபடியால் நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ நாம் என்றும் நல்லவற்றையே நினைக்க வேண்டும்; நல்லவற்றையே பேசவேண்டும்; நல்லவற்றையே நாடவேண்டும் பரந்தசொல் - பரந்த மனப்பான்மை வேண்டும். இப்பாங்கு எம்முள் நிலைக்கவேண்டுமானால் ஒருவனாகிய இறைவனிடம் ஒன்றியிருந்து வாழும் பழக்கத்தை இடைவிடாது நாம் மேற்கொள்ளவேண்டும். இதனால் என்றும் நல்லவனே வெற்றி பெறுவான் என்பது திண்ணம். இவ்வாறு நமது புராதன புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

நன்மை என்றும் வெற்றி பெறும் என்னும் உண்மையை தன்னை நாடும் அன்பர்கள் உள்ளத்து உணரும் படியாக முருகப்பெருமான் திருக்கரத்தில் வேலைத்தாங்கி வைத்திருக்கிறான். அடியார்களும் "வேல் வேல்! வெற்றிவேல்! வீரவேல்! சூரவேல்!" என நாவாரத் துதித்து நாடரும் நன்மைகளையும் சித்திகளையும் பெறுகின்றனர். ஞான வேலை வழிபடுகின்றவர்கள் முருகனையே வழிபட்டவராகின்றனர். முருகன் முன்னிலையில் தலையிற் கரங்குவித்து அன்பர்கள் மனம் ஒற்றும்போது அவர்கள் முருகன் கைவேல் ஆகின்றனர்; முருகனும் முன்வந்து அவர்களை ஆட்கொள்கின்றான்.

வெல் என்ற வேர்ச்சொல் முதனீண்டு வேல் என்று ஆகின்றது. அதனால் வேல் என்றால் வெற்றி என்ற பொருள். நமது வாழ்வில் இருவகைப் பகைவர்களை நாம் காணலாம். வெளிப்படையான பகைவர்கள் ஒருவகையினர். இவர்களை நாம் ஒருவாறு வென்றுவிடலாம். நமக்குள்ளே மறைந்து நிற்கும் மற்றொரு வகையினர். நம்முள் நிறங்காட்டாது கரந்து நிற்கும் ஐம்புலப் பகைவர்களே இவர்கள். இவர்களை வெற்றி கொள்ள நம் உள்ளே ஒருவேல் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வேலுக்கு ஞானம் என்று பெயர். ஞானம் என்னும் விளக்கை முன்வைத்து நாம் வாழ்க்கையை நடாத்திச் சென்றால் எந்த இருளையும் முக்கியமாக எமது அகவிருளையும் நம்மாற் கடக்க முடியும். ஞானம் என்பது இறைவனை அறியும் அறிவு. அறிவை அறிவால் அறிந்துணர்வு அறிவாய் நின்றால் அகப்பகைவரால் நிகழும் ஆரிருள் அழிந்தொழிந்து விடும்.

எமது ஞானத்தையே முருகன் திருக்கரம் தாங்கி நிற்கின்றது. இதனால் முருகன் திருக்கரம் தாங்கி நிற்கின்றது. இதனால் முருகன் திருக்கை வேலுக்குத் தனிவேல் என்ற சிறப்புப் பெயரை அடியார்கள் வழங்குகின்றார்கள். மற்றவர்களை அழிக்கும் கொடிய வேல்களினின்றும் இதனைப் பிரித்து தனிவேல் என்றழைப்பதில் ஒரு தனிச்சிறப்பு தனிவேலுக்கு அமைவதை நாம் உணரலாம். முருகன் திருக்கைத் தனிவேல் கொடுமையைத்தான் தீய்க்குமேயன்றி உயிர்களை வதைக்காது. அறிவூட்டி, அருளூட்டி ஆனந்தப் படுத்தும். வேல் தாங்கி நிற்கும் வேலன் எம் வாழ்வின் வழிகாட்டி. பேரா வியற்கைப் பெரு வாழ்வளிக்கும் பெருமான். வேல் தாங்கி நிற்கும் வேலனை நாம் வழிபட்டுய்வோமாக.



## அஞ்சலி உரை

### ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் அவர்களின்
### மறைவு குறித்த

# இரங்கல் செய்தி

சைவத்தமிழ் உலகத்துக்கு கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அறிமுகமாகி வாழ்ந்தவர் இப்பெரியார் பண்டிமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவின் அபிமான சீடராக இருந்து இவரைப்பற்றிய ஆக்கப் பணிகள் பல புரிந்தவர் இவர். எழுத்தாற்றலும் சொல்லாற்றலும் மிக்கவரான இவர் இலக்கியப் பணியிலும் சைவப் பணியிலும் மிகுதியும் ஈடுபட்டவர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக சிறந்த சமூகத்தொண்டு நிறுவனமாக விளங்கிய உரும்பிராய் கருணை இல்லத்தைத் தலைவராக இருந்து நன்கு பரிபாலித்தவர். "பஞ்சாட்சரம்" என்ற நாமம் சேவையின் சின்னமாக எமது மண்ணில் விளங்கியது. இன்று அன்னாருடைய குரல் ஓய்ந்து விட்டாலும் அவர் ஆற்றிய பணிகள் இந்த மண்ணுக்கு உரமாக அமையும் என்பதைக் கூறி அன்னாரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**தெல்லிப்பழை**

## மூன்று தேவியராக தோற்றம் ஆனவளே

நவராத்திரியில் கொலு வீற்றிருக்கும் தேவியே
நாளும் பணிகின்றோம் தங்கள் சேவடியே
அம்மா அகில லோகத்தைக் காக்கின்ற
அன்னை ஆதி பராசக்தி தாயே.


நவராத்திரியில் பூசை செய்வோம் நாமுமே
நல் வரங்களைத் தந்தருள்வாய் அம்பிகையே
அத்தனை உயிர்களையும் காக்கின்ற அன்னையே
மூன்று தேவியராக தோற்றம் ஆனவளே

**ஆக்கம் :- கிருஸ்ணசாமி கஸ்தனி**









# அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித்துணையே



திருவிழாவில் – திருமுறை மண்டபத்தில்
சிவத்தமிழ்ச்செல்வி
அன்னை உரையாற்றும் காட்சி.



துர்க்காதேவியின் வேட்டைத்திருவிழா

பிள்ளையார் நேர்ச்சுப் பதிப்பகம் நல்லூர்